நீதித்துறை நடுவர் எண்.II நீதிமன்றம், திண்டுக்கல்
முன்னிலை : திரு.C.தினேஷ் குமார்.B.A.,L.L.B.(Hons.).,LL.M.,
நீதித்துறை நடுவர் எண்.II திண்டுக்கல்
2026ம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் நாள் செவ்வாய்க்கிழமை

**Crl.M.P. No. 527/2026**

**CNR No.TNDG03-001689-2026**

திரு.சிவபாண்டி(23/2026)
த/பெ. வடிவேல்,
396/1, பொன்னகரம்,
நத்தம்ரோடு, அடியனூத்து,
திண்டுக்கல். . . . மனுதாரர் / செல்போன் உரிமையாளர்

/ எதிர் /

அரசுக்காக சார்பு ஆய்வாளர்,
நகர் வடக்கு காவல் நிலையம்,
குற்ற எண். 54/2026
சட்டப் பிரிவுகள் 8(c), 20(b)(ii)(A), 25, 29(1) NDPS Act

. . . . குற்ற முறையீட்டாளர்/எதிர்மனுதாரர்

இம்மனுவானது 10.03.2026 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. P.திருவேங்கடம், B.A., B.L., அவர்கள் ஆஜர் ஆகியும், அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை.2 முன்னிலை ஆகியும் ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**உத்தரவு**

1) மனுதாரர் தரப்பில் பிரிவு 503 of BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2)எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. பதில் பெறப்பட்டது.

3) மனுதாரர் தரப்பில், மனுதாரருக்கு சொந்தமான OPPO F31 5G செல்போன் நகர் வடக்கு காவல் நிலைய காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டு நகர் வடக்கு காவல் நிலைய குற்ற எண்.54/2026 வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி செல்போன் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படாமல் போலிசார் வசம் உள்ளதாகவும், மேற்படி செல்போன் மனுதாரருக்கு வேலை சம்பந்தமாக தேவைப்படுவதாகவும், மேற்படி செல்போனை மனுதாரர் வசம் இடைக்காலமாக வழங்கும் பட்சத்தில் மனுதாரர் நீதிமன்றம் உத்தரவிடும் எவ்வித கட்டுப்பாடுகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பதாகவும், வழக்கு சொத்தினை விற்கவோ, அடமானம் வைக்கவோ, சேதப்படுத்தவோ, புதுப்பிக்கவோ மாட்டேன் எனவும், மேற்படி

தனது செல்போனை இடைக்காலமாக மனுதாரர் வசம் ஒப்படைக்க வேண்டி மனுதாக்கல் செய்துள்ளார்.

4) பதில் அறிவிப்பில் உலர் கஞ்சாவை வைத்து விற்பனை செய்த எதிரிகளை பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்து புகார் அளித்ததின் பேரில் எதிரிகளிடமிருந்து 300 கிராம் உலர் கஞ்சா, செல்போன் –2, TN 59 AH 7265 Hero Honda Splender Plus மற்றும் பணம் ரூ.3000/– ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டு திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய குற்ற எண்.54/2026 சட்டப் பிரிவுகள் 8(c), 20(b)(ii)(A), 25, 29(1) NDPS Act–ன் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கின் கைப்பற்றப்பட்ட செல்போன் மற்றும் இருசக்கர வாகனங்களை அரசுடமையாக்க உள்ளதால் வழக்குச் சொத்தினை மனுதாரர்/1வது எதிரி வசம் ஒப்படைக்க கடும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.

5) கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது பதில் அறிவிப்பிலும் தனது வாதுரையிலும் , வழக்கு சொத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க கடும் ஆட்சேபணை தெரிவித்தார்.

6) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

7) வழக்காவணங்களை பரிசீலனை செய்ததன் அடிப்படையிலும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் பார்த்ததில், இவ்வழக்கு சொத்தான Oppo F31 5G செல்போனானது இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை என்பதாலும், மேற்படி வழக்குச் சொத்து inventory எடுக்கப்பட்டுள்ளது என்று போலிசார் பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளதை கருத்திற்கொண்டும், மேலும் இவ்வழக்கு விசாரணையில் நிலுவையில் உள்ளது என்பதைக் கருத்திற்கொண்டும், நீதியின் நலன் கருதி இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக அலுவலக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் செவ்வாய்கிழமை இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.03.17 18:55:17 +0530

நீதித்துறை நடுவர் எண்.II
திண்டுக்கல்.